ඉඩම් පරිහරණ ප්‍රතිපත්ති සැලසුම් දෙපාර්තමේන්තුව

காணிஉபயோகக்கொள்கைத்திட்டமிடல்தி ணைக்களம்

Land Use Policy Planning Department

# 2013

## කාර්ය සාධන වාර්තාව

## செயற்திறன்அறிக்கை

## Performance Report

ඉඩම් පරිහරණ ප්‍රතිපත්ති සැලසුම් දෙපාර්තමේන්තුව

காணிஉபயோகக்கொள்கைத்திட்டமிடல்திணைக்களம்

# Land Use Policy Planning Department

# 2013

# කාර්ය සාධන වාර්තාව

## செயற்திறன்அறிக்கை

# Performance Report

உள்ளடக்கம்


01. அறி மு கம்

1.1 ந ாேக்க

1.2 சயெற்பணி

1.3 சுறி க்க ாேள்

1.4 பணி கள்

02. நி று வனக் கட்டம ைப்பு

03. மனி தவள மு காம த்துவம்

3.1 பணி யாட் த ாெகுதி கட்டம ைப்பு

3.2 இடமா ற்றங்கள்

3.3 தாபன நடவடிக்க கைள்

3.4 மனி தவள அபி வி ருத்தி

04. நி தி மு காம த்துவம்

4.1 வரவு சலெவு மதி ப்பீடு- 2013

4.2 ப ௌதீகவளங்கள் மு காம த்துவம் -2013

05. அபி வரு த்தி நடவடிக்க கைள்

5.1 பி ரதசே காணி ப் பயன்பாட்டுத் தி ட்டங்களை தயா ரி த்தல் (காணி ப் பயன்பாட்டு பி ரச்சனகைளை இனங்காணல், அவற்றி ன் பாதி ப்புக்களை சுறைப்பதற்கான தி ட்டங்களைத் தயா ரி த்து அவற்றை அமு லா க்கல்)

5.2 மா வட்ட காணி ப் பயன்பாட்டுத் தி ட்டமி டற் சுழு

5.3 பி ரதசே மட்டகாணி ப் பயன்பாட்டுத் தி ட்டமி டற் சுழு

5.4 கி ராம மட்டகாணி ப் பயன்பாட்டுத் தி ட்டமி டல் சயெல்மு றை

5.5 காணி த்துண்டு மட்டத்தி ல் காணி ப் பயன்பாட்டுத் தி ட்டமி டல் சயெல்மு றைவி ளக்கம்

5.6 தரமி ழந்த காணி களை புனரம ைப்பதற்கான தி ட்டம்

5.7 பாடசாலபை் பி ள்ளகைளு க்கும், சமூகத்தி ற்கும் வி ழி ப்புணர்வுத் தி ட்டம்

5.8 நி லப் ப ாெரு த்தப்பாட்டு அறி க்க கைள்

5.9 வி சடே தி ட்டங்கள்

5.10 வருடாந்த வலேத்தி ட்டம் பற்றி ய கரு த்தரங்கு

5.11 மா வட்ட மட்டத்தி ல் தி ட்டங்களி ன் மு ன்னறே்றம்

# காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்

## 01. அறிமுகம்

"காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடற் பிரிவு" காணி, காணி அபிவிருத்தி அமைச்சின்கீழ் ஒரு பிரிவாக இந்நாட்டிற்கு விஞ்ஞானரீதியிலான காணிப்பயன்பாட்டுத் திட்டமிடலை அறிமுகப்படுத்தும் நோக்கில் 1983ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. நாட்டின் தேவையினை கருத்திற்கொண்டும் பிரிவின் செயற்பாடுகள் விரிவாக்கப்பட்டதனாலும் அதனைத்தொடர்ந்து பிரிவின்பொறுப்புக்கள் அதிகரித்தனாலும் 2010ம் ஆண்டில் திணைக்களமாக தரமுயர்த்தப்பட்டது.

காணி உபயோகக்கொள்கைத் திட்டமிடல்; திணைக்களத்தின் தலைமையகம் நாரஹென்பிட்டியில் அமைந்துள்ளது. இதன்கீழ் 25 மாவட்ட அலுவலகங்கள் இயங்குகின்றன. மாவட்ட அலுவலகங்களிற்கு மாவட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர் பிரதான உத்தியோகத்தராவர். மேலும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட 245 பிரதேச செயலக மட்டத்திலான உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகப்பிரிவுகளில் காணிப்பயன்பாட்டுத் திட்டமிடற் செயற்பாடுகளை மேற்கொள்கிறார்கள். வெளிக்கள மட்டத்தில் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்காக 164 பட்டதாரிகள் 2013ம் ஆண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

### 1.1. நோக்கு

இலங்கையின் நிலவளங்களை மிகச்சிறப்பாகவும், வளங்குண்றாதநிலையிலும் பயன்படுத்தல்.

### 1.2. குறிக்கோள்

நிலவளத்தை மிகச்சிறப்பாக பயன்படுத்தலை நிறைவேற்றுவதற்காகவும் எமது பங்காளர்களைவும் நிலப் பாவனையாளர்களையும் திருப்திப்படுத்துவதற்காகவும் சாமர்தியமும் பொறுப்புணர்வுமுள்ள பணியாளர்களால் கொள்கைகளை வகுத்தல், திட்டங்களை உருவாக்குதலுடன் நிலவளங்குன்றாத நிலையினையும் சூழற்சமநிலையையும் பேணுதலுமாகும்.

## 1.3. கா.ப.கொ.தி. திணைக்களத்தின்பிரதானநோக்கங்கள்

1. இலங்கைக்கான தேசிய காணிஉபயோகக் கொள்கைகளை அமுல்ப்படுத்தத் தேவையானசட்டபின்னணியைஉருவாக்கல்.
2. இலங்கைக்கான தேசியகாணிப் பயன்பாட்டுத்திட்டம் தயாரித்தல்.
3. மட்டுப்படுத்தப்பட் வளமான நிலவளத்தை மனித மேம்பாட்டிற்காக சுற்றாடல் சமநிலையை பேணும் வகையில் பயன்படுத்தக்கூடியவாறு பொருத்தமான தொழில்நுட்ப வழிகாட்டல்களை வழங்கல்.
4. நிலத்தை அடிப்படையாகக்கொண்ட அபிவிருத்தித் திட்டங்களின்போது நிலவளத்தின் பாதுகாப்பும் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையும் உறுதிப்படுத்துமாறு நடவடிக்கை மேற்கொள்வதற்கு உரிய சிபாரிசுகளையும் பணிப்புரைகளையும் வழங்கல்.
5. விஞ்ஞானரீதியிலான காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் தொடர்பில் அறிவு ஆற்றல் பயிற்சி என்பன விஸ்தரிக்கப்படுமாறு நிகழ்ச்சித் திட்டங்களை அமுல் செய்தல்.

## 1.4. காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல்; திணைக்களத்தின் செயல்பங்கு திணைக்களத்

தினால் மேற்கொள்ளப்படும் காணிப்பயன்பாட்டுத் திட்டமிடற் செயற்பாடுகள் இருமட்டங் களிலாகும்.

(அ) பேரளவுமட்டம் **(Macro level)**

இம்மட்டத்தில் மாகாணம், மாவட்டம் மற்றும் பிரதேச செயலாளர்பிரிவுகளிற்கு காணிப் பயன்பாட்டுத் திட்டங்கள் உருவாக்கப்படும். ஏல்லா மாவட்டங்களிலும் பிரதேச செயலாளர் பிரிவுகளிற்கு காணிப் பயன்பாட்டுத் திட்டங்கள் உருவாக்கப்படுவதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதுடன் கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் (LLRC) அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பரிந்துரைகளை அமுலாக்கும் திட்டத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள மாவட்டங்களுக்கு மாவட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டங்கள் உருவாக்கப்படும்.

(ஆ) நுண்மட்டம் **(Micro level)**

இம் மட்டத்தில் பிரதான செயற்பாடுகள்:

(1). கிராம மட்டத்திலான காணிப்பயன்பாட்டுத் திட்டமிடலை செய்வது எவ்வாறென செய்துகாட்டுதல்.

(2). தரமிழக்கப்பட்ட நிலங்களை புனரமைப்பதற்கான திட்டங்களை தயாரித்தல்.

(3). அரசஅலுவலக வளவில் மற்றும் பாடசாலைகளிலுள்ள வெற்றுக்காணிகளில் திறமையான காணிப்பயன்பாடுபற்றிய செய்துகாட்டல்.

(4). அரச நிறுவனங்களின் வேண்டுகோளிற்கிணங்க பயன்படுத்தப்படாத காணிகளில் காணிப் பொருத்தப்பாடு பற்றிய கற்கைகளை மேற்கொள்ளல்.

மேலுள்ள காணிப்பயன்பாட்டு திட்டமிடற் செயற்பாடுகளிற்கு பின்வரும் செயற்பாடுகள் ஆதரவளிக்கும்.

1. காணிப்பயன்பாட்டுத் தகவல் முறைமையை பராமரித்தல்.
2. மாவட்ட மட்டத்திலான காணிப்பயன்பாட்டு வரைபடங்களை தயாரித்தல்.
3. காணிகளை பயன்படுத்துவோர் காணி சம்பந்தப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் ஆகியோரின் நன்மைக்காக விழிப்புணர்வு கூட்டங்களை நடாத்துதல்.
4. மாவட்ட, பிரதேசமட்டத்தில் காலத்திற்குகாலம் முன்வைக்கப்படும் காணிப்பயன்பாடு சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை வெளிப்படுத்துவதற்காக காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழுகூட்டங்களை மாவட்ட, பிரதேசமட்டத்தில் ஏற்பாடுசெய்தல்.

# 03. மனிதவள முகாமைத்துவம்

## 3.1. பணியாட்தொகுதி கட்டமைப்பு

| தொடர் இல. | அனுமதிக்கப்பட்ட பணியாட்த தொகுதி | பதவிகளின் எண்ணிக்கை | முந்திய வருடத்தில் எண்ணிக்கை | வருடத்தில்ஏற்பட்டமாற்றங்கள் -2013 | | | | | நடப்பு வருடத்தில் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஓய்வு பெற்ற | இடமாற்றம் சென்ற | இடமாற்றம் வந்த | ஆட் சேர்ப்பு | பதவி உயர்வு | |
| 01 | பணிப்பாளர்நாயகம் | 01 | - | | | | | | 01 |
| 02 | பணிப்பாளர் | 01 | 01 | | | | | | - |
| 03 | பிரதிப்பணிப்பாளர் | 02 | 01 | | | | | | 01 |
| 04 | கணக்காளர் | 01 | 01 | | | | | | 01 |
| 05 | உள்ளககணக்காய்வாளர் | 01 | | | | | | | |
| 06 | உதவிப்பணிப்பாளர் | 05 | 04 | 01 | | | | | 03 |
| 07 | கணிணி முறைமைப் பகுப்பாளர் | 01 | 01 | | | | | | 01 |
| 08 | நிருவாக உத்தியோகத்தர் | 01 | - | | | | | | 01 |
| 09 | காணிப்பயன்பாட்டுத்திட்டமிடல்உத்தியோகத்தர் | 25 | 17 | 02 | | | | | 15 |
| 10 | உதவி காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர், காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல்உதவியாளர்/ அபிவிருத்தி உத்தியோகத்தர் | 350<br>200 | 307 | | 08 | | | **148** | 299 |
| 11 | அரசமுகாமைத்துவ உதவியாளர் | 33 | 29 | | 02 | 02 | | | 28 |
| 12 | தகவல் தொடர்பு தொழில்நுட்ப உதவியாளர் | 01 | 01 | | | | | | 02 |
| 13 | சாரதி | 14 | 14 | | | | | | 14 |
| 14 | அலுவலகஉதவியாளர் | 29 | 29 | | | | | | 29 |
| 15 | வரவுசெலவுத்திட்ட உதவியாளர் | 01 | 00 | | | | | | 01 |
| 16 | வரைபடவினைஞர் | 25 | 22 | | | | | | 22 |
| | மொத்தம் | **691** | **428** | **03** | **10** | **02** | **164** | **01** | **566** |

## 3.2. இடமாற்றங்கள்

| தொடர் இல. | பெயர் மற்றும் பதவி | இடமாற்றம் பெற்றுச் சென்ற | | இடமாற்றம் பெற்று வந்த | | |
|---|---|---|---|---|---|---|
| | | திகதி | இடமாற்றலாகி சென்ற இடம் | பின்வருநர் பெயர் | திகதி | இடமாற்றம் பெற்றஇடம் |
| 01 | திருமதி.வை.எம்.என்.பி. யாப்பா (அரசமுகாமைத்துவ உதவியாளர்) | 2013.01.31 | பேராதனை வைத்தியசாலை | செல்வி.எச்.ஏ.ஏ.கே.விஜயரத்ன (அரசமுகாமைத்துவ உதவியாளர்) | 2013.0131 | பொலிஸ் தலைமை அலுவலகம் |
| 02 | திரு.கே..டபிள்யு. சிறில் அபயவிக்கிரம (அலுவலகஉதவியாளர்) | 2013.01.03 | கமநலசேவை திணைக்களம் | திரு.ஜி.எச்ஜயதிலக (அலுவலகஉதவியாளர்) | 2013.01.31 | சுங்க திணைக்களம் |
| 03 | திரு.ஜி.எச்ஜயதிலக (அலுவலகஉதவியாளர்) | 2013.01.31 | தொழில் திணைக்களம் | திரு.டி.ஜெயவீர (அலுவலகஉதவியாளர்) | 2013.01.31 | தொழில் திணைக்களம் |
| 04 | செல்வி.ஐ.ஜி.தர்சனிகா (அரசமுகாமைத்துவ உதவியாளர்) | 2013.01.11 | தெவிநுவர பிரதேச செயலகம் | - | - | - |
| 05 | திரு.தெல்பசித்திரா (அரசமுகாமைத்துவ உதவியாளர்) | 2013.02.06 | மீன்பிடி மற்றும் நீர்வளங்கள் அமைச்சு | திரு.தெல்பசித்திரா (அரசமுகாமைத்து உதவியாளர்) | 2013.01.08 | சுங்க திணைக்களம் |

## 3.3. தாபனநடவடிக்கைகள்

| தொடர் இல. | விபரங்கள் | கடந்தவருடம் (2012) | | | நடப்புவருடம் (2013) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெறப்பட்ட எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | மிகுதி | பெறப்பட்ட எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்டஎண்ணிக்கை | மிகுதி |
| 01 | ஆட்சேர்ப்பு | - | - | - | 148 | 200 | 52 |
| 02 | நடத்தப்பட்ட பரீட்சைகள் | - | - | - | 01 | - | - |
| 03 | நடத்தப்பட்டநேர்முகப் பரீட்சைகள் | - | - | | - | - | - |
| 04 | பதவி நிரந்தரமாக்கப்பட்டவை | 08 | 08 | - | - | - | - |
| 05 | பதவிஉயர்வுகள் | - | - | - | - | - | - |
| 06 | சம்பளஉயர்வு செலுத்தியவை | 396 | 418 | 22 | 418 | 355 | 63 |
| 07 | சேவைநீடிப்பு | - | - | - | - | - | - |
| 08 | ஆட்சேர்ப்பு விதிமுறைகள் தயாரிக்கப்பட்டவை | 05 | 03 | 02 | 05 | 03 | 02 |
| 09 | பதவிவெறிதாக்கல் | - | - | - | 01 | - | - |
| 10 | தடையுத்தரவு | 01 | 01 | - | - | - | - |
| 11 | மீளச்சேர்த்தல் | - | - | - | 01 | - | - |
| 12 | ஒழுங்குவிசாரணைகள் | 01 | 01 | - | - | - | - |
| 13 | வெளிநாடுசெல்லலீவு | 01 | 01 | - | 01 | 01 | - |
| 14 | வெளிநாட்டு புலைமைப்பரிசில் | - | - | - | 01 | - | - |
| 15 | மந்திரிசபை குறிப்பு | - | - | - | 01 | - | - |
| 16 | கையெழுத்திட்ட பிணைகள் | - | - | - | - | - | - |
| 17 | விடுதலையான பிணைகள் | - | - | - | - | - | - |
| 18 | அனுமதிக்கப்பட்ட கடன் (இடர்) | 68 | 51 | 17 | 62 | 28 | 34 |
| 19 | சொத்து | 05 | 05 | - | 20 | 20 | - |
| 20 | வாகனங்கள் | 24 | - | - | - | - | - |
| 21 | ஏனையவை | - | - | - | - | - | - |
| 22 | விடுவிக்கப்பட்டது | - | - | - | - | - | - |

## 3.4. மனிதவளஅபிவிருத்தி

**வெளிநாட்டுப்பயிற்சி**

| தொடர் இல- | பயிற்சிநெறி | பெயர் | பதவி | நாடு | காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | தேசியமட்டத்தில் வரைபடமாக்கல் நிலஅளவையில் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் | திருமதி..எஸ.ஏச்.சி.கே. ஆரியவன்ச | உதவி காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர் | யப்பான் | 04 மாதங்கள் |

**உள்நாட்டுப்பயிற்சி**

| தொடர் இல- | பயிற்சிநெறி | பெயர் | பதவி | நிறுவனம் | காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | சுயஊக்கம் மற்றும் நேரான எண்ணங்கள் எனும் தலைப்பிலும் கா.உ.கொ.தி.தின் வருடாந்த வேலைத்திட்டம் பற்றியதுமான பயிற்சிப்பட்டறை | 325 உத்தியோகத்தர்கள் | உதவிப்பணிப்பாளர்கள், காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள், உதவி காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள், காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உதவியாளர்கள் | கா.உ.கொ.தி.தி இனால் ஏற்பாடு செய்யப்பட்டது | 01 நாள் |
| 02 | பட்டப்பின்படிப்பு | 09 உத்தியோகத்தர்கள் | உதவிகாணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள், காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உதவியாளர்கள் | பேராதனை, கொழும்பு, ஸ்ரீஜயவர்த்தனபுரகளனிப் பல்கலைக் கழகங்கள் | 1-2 வருடங்கள் |
| 03 | புவியியல் தகவல் முறைமை பயிற்சி (GIS) | 08 உத்தியோகத்தர்கள் | காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உதவியாளர்கள் | விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவனம் | 06 நாட்கள் |
| 04 | புவியியல்தகவல்முறைமை - ஆர்க்பயிற்சி (GIS Arc) | 01 உத்தியோகத்தர்கள் | முறைமைதரவுஇியர்குனர் | GIS சொலுசன்ஸ் பிறைவேற் லிமிட்டெட் | 03 நாட்கள் |
| 05 | காணிப்பயன்பாட்டு திட்டமிடல் மற்றும் அலுவலக முகாமைத்துவம் | 130 உத்தியோகத்தர்கள் | அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | கா.உ.கொ.தி.தி இனால் ஏற்பாடு செய்யப்பட்டது | 03 நாட்கள் |
| 06 | அரச அலுவலர்கான தகவல் த டொர்ப த ொழில்நுட்ப திறமை விருத்தி | 04 உத்தியோகத்தர்கள் | உதவி காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தாகள் காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உதவியாளர்கள் | மாவட்ட செயலகம் - அனுராதபுரம் | 16 நாட்கள் |

| தொடர் இல- | பயிற்சிநெறி | பெயர் | பதவி | நிறுவனம் | காலம் |
|---|---|---|---|---|---|
| 07 | புவியியல்சார் கருத்துக்களம் | 04 உத்தியோகத்தர்கள் | பிரதிப் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர், காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர், உதவி காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர் | நிலஅளவைத் திணைக்களம் | 01 நாள் |
| 08 | உற்பத்தித்திறன் பயிற்சி | 05 உத்தியோகத்தர்கள் | உதவிப்பணிப்பாளர்கள், காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல், உத்தியோகத்தர்கள், உதவி காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள், காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உதவியாளர்கள் | காணி, காணி அபிவிருத்தி அமைச்சு | 02 நாள் |
| 09 | ஐஎஸ்ஓ 9001-2008 பயிற்சிப்பட்டறை | 50 உத்தியோகத்தர்கள் | உதவிப் பணிப்பாளர்கள், உதவி காணிப் பயன்பாட்டுத்திட்டமிடல் உத்தியோகத்தர்கள், காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உதவியாளர்கள், அரசமுகாமைத்துவ உதவியாளர்கள் | இலங்கை கட்டளைகள் நிறுவனம் | 03 நாட்கள் |
| 10 | விண்கோள் நிலஅளவை முறைமை பயிற்சி (GPS) | 30 உத்தியோகத்தர்கள் | அரச முகாமைத்துவ உதவியாளர்கள் | கா.உ.கொ.தி.தி இனால் ஏற்பாடு செய்யப்பட்டது | 01நாள் |
| 11 | தனிப்பட்ட கோவை பராமரித்தல் | 02 உத்தியோகத்தர்கள் | அரசமுகாமைத்துவ உதவியாளர்கள் | திறமை அபிவிருத்தி நிறுவனம் | 01 நாள் |
| 12 | காணிப்பயன்பாட்டு திட்டமிடலில் கூகிழ் புறோ பயன்படுத்தல் பயிற்சி | 27 உத்தியோகத்தர்கள் | உதவி காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள், காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உதவியாளர்கள், | கா.உ.கொ.தி.தி இனால் ஏற்பாடு செய்யப்பட்டது | 2நாட்கள் |
| 13 | திறமைஅபிவிருத்தி பயிற்சி | 03 உத்தியோகத்தர்கள் | அலுவலகஉதவியாளர்கள்,சாரதி | திறமை அபிவிருத்தி நிறுவனம் | 01 நாள் |
| 14 | தரவுசேகரித்தல் பயிற்சி | 85 உத்தியோகத்தர்கள் | வடக்கு, கிழக்கு மாவட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உதவியாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | கா.உ.கொ.தி.தி இனால் ஏற்பாடு செய்யப்பட்டது | 02 நாட்கள் |
| 15 | காணிப்பயன்பாட்டு வரைபடம் இற்றைப்படுத்தல் பயிற்சி | 85 உத்தியோகத்தர்கள் | வடக்கு, கிழக்கு மாவட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உதவியாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | கா.உ.கொ.தி.தி இனால் ஏற்பாடு செய்யப்பட்டது | 02 நாட்கள் |
| 16 | மண்ஆய்வுபற்றிய பயிற்சி | 20 உத்தியோகத்தர்கள் | உதவி காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள், காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உதவியாளர்கள் | கா.உ.கொ.தி.தி இனால் ஏற்பாடு செய்யப்பட்டது | 01 நாள் |
| 17 | நேர்முகப்பரீட்சை பற்றிய பயிற்சி | 01 உத்தியோகத்தர்கள் | பிரதிப் பணிப்பாளர் (காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல்) | திறமை அபிவிருத்தி நிறுவனம் | 01 நாள் |
| 18 | ஆங்கில டிப்ளோமா பயிற்சி | 03 உத்தியோகத்தர்கள் | உதவி காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள், காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உதவியாளர்கள் | இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம் (SLIDA) | 01 வருடம் |
| 19 | தமிழ்மொழிப் பயிற்சி | 20 உத்தியோகத்தர்கள் | அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அரசமுகாமைத்துவ உதவியாளர்கள் | தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் | 10 மாதங்கள் |

# 04. நிதி முகாமைத்துவம்

## 4.1 வரவு செலவு மதிப்பீடு

மதிப்பீடு

| தொடர் இல | முந்தியவருடம் (2012) | | | செலவு நூற்று வீதம் | நடப்புவருடம் (2013) | | | செலவு நூற்று வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கீடு | செலவு | சேமிப்பு | | ஒதுக்கீடு | செலவு | சேமிப்பு | |
| 1.கருத்திட்டம் 1 | | | | | 2.கருத்திட்டம்1 | | | |
| வேதனங்கள் மற்றும் ஊதியங்கள் | 130,515,345.12 | 130,232,970. 90 | 282,374. 22 | 99.78% | **155,789, 000** | 155,789, 000 | 48,250. 41 | 99.96% |
| ஏனைய மீண்டெழும் | 31,668,357. 88 | 31,029,225. 21 | 639,132. 67 | 97.98% | **31,881,000** | 31,353,292. 38 | 527,707. 62 | 98.34% |
| மூலதனம் | | | | | | | 725,562. 53 | |
| 2001 | 11,000, 000 | 4,630,834. 62 | 6,369,165. 38 | 42.09% | **9,400,000** | 8,674,437. 47 | | 92.28% |
| 2002 | 1,800, 000 | 355,998. 80 | 1,444,001. 20 | 19.77% | **1,800,000** | 680,096. 55 | 1,119,903. 45 | 37.78% |
| 2003 | 2,727,597 | 2,727,596. 82 | 0. 18 | 99.99% | **3,8000,000** | 3,146,267. 82 | 653,732. 18 | 82.79% |
| 2101 | **177,711, 300** | **168,976,626. 35** | **8,734,673. 65** | **95. %08** | **202,670,000** | **199,594,543. 81** | **3,075,156.19** | 98.48% |
| 2.கருத்திட்டம் 2 | | | | | | | | |
| வேதனங்கள் மற்றும் ஊதியங்கள் | | | | | | | | |
| ஏனைய மீண்டெழும் | | | | | | | | |
| மூலதனம் | | | | | | | | |
| 2001 | | | | | | | | |
| 2002 | | | | | | | | |
| 2003 | | | | | | | | |
| 2101 | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | |

**அரசாங்க உத்தியோகத்தர்கள் முற்பனம் B கணக்கு**

| எல்லைகள் | முந்தியவருடம் (2012) | | நடப்புவருடம் (2013) | |
|---|---|---|---|---|
| | மதிப்பீடு | சரியான | மதிப்பீடு | சரியான |
| செலவுஅதிகபட்சஎல்லைகள் | 18,000,000 | 6,544,712.10 | 18,000,000 | 17,514,785.32 |
| கடன்நிலுவைகுறைந்தபட்சஎல்லைகள் | 6,500,000 | 8,983,964.04 | 6,500,000 | 7,764,353.75 |
| பற்றுநிலுவைஅதிகபட்சஎல்லைகள் | 48,500,000 | 34,401,598.53 | 60,000 | 44,152,030.10 |

## 4.2. பௌதீக வளங்கள் முகாமைத்துவம்

### அசையும்சொத்துக்கள்

| தொடர் இல. | சொத்துவகை | வருட ஆரம்பத்தில் நிலை | வருடத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் | | | | வருட இறுதியில் நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | கையகப் படுத்தல் | கொள்வனவு | ஏல விற்பனை | அகற்றுதல் | |
| 1 | பாரவாகனங்கள் | | | | | | - |
| 2 | கெப்வண்டி | 06 | | | | | 06 |
| 3 | வான் | 01 | | | | | 01 |
| 4 | ஜீப் | 15 | | | 03 | | 12 |
| 5 | மோட்டார்சைக்கிள் | - | | | | | - |
| 6 | சைக்கிள் | 01 | | | | | 01 |
| 7 | பிரதிஎடுக்கும்இயந்திரம் | 01 | | | | | 01 |
| 8 | நிழல்பிரதிஎடுக்கும்இயந்திரம் | 26 | | 03 | | | 29 |
| 9 | கணிணி | 132 | | 18 | 11 | | 138 |
| 10 | கணிணிஅச்சுஇயந்திரம் | 43 | | | 04 | | 39 |
| 11 | லப்ரொப்கணிணி | 26 | | 08 | 01 | | 33 |
| 12 | தொலைநகல்இயந்திரம் | 19 | | 08 | 01 | | 26 |
| 13 | தட்டச்சுஇயந்திரம் (கைமுறை) | - | | | | | - |
| 14 | தட்டச்சுஇயந்திரம் (மின்இயக்கம்) | - | | | | | - |
| 15 | பணக்காப்புப்பெட்டி | 01 | | | | | 01 |
| 16 | கமரா | 26 | | | | | 26 |
| 17 | வீடியோகமரா | - | | | | | - |
| 18 | தொலைக்காட்சிப்பெட்டி | 02 | | | | | 02 |
| 19 | வானொலிப்பெட்டி | - | | | | | - |
| 20 | குளிர்சாதனப்பெட்டி | 01 | | | | | 01 |
| 21 | கணிணிஅச்சுஇயந்திரம் (கலர்) | 21 | | 03 | 02 | | 22 |
| 22 | ஸ்கேன்இயந்திரம் | 27 | | | | | 27 |
| 23 | மல்ரிமீடியாஉபகரணங்கள் | 19 | | 07 | 02 | | 24 |
| 24 | ஜீ.பி.எஸ்உபகரணங்கள் | 52 | | 18 | | | 70 |
| 25 | இணையத்தளவசதிகள் | 22 | | ADSL | | | 22 |
| 26 | ஸ்லைட்புறஜெக்டர் | - | | | | | - |

# 05. அபிவிருத்திநடவடிக்கைகள்

## 5.1. பிரதேச காணிப் பயன்பாட்டுத் திட்டங்களை தயாரித்தல்

ஒவ்வொரு மாவட்டத்திலும் பிரதேசமட்டத்தில் காணிப் பயன்பாட்டுத் திட்டங்களை தயாரிப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. இச் செயற்திட்டத்தின் நோக்கம் நாட்டின் நிலவளத்தை வளங்குன்றாமல் பயன்படுத்த வழிகாட்டுதலாகும். எவ்வாறாயினும் பிரதேச செயலக பிரிவுகளிலுள்ள நிலங்களில் பெரும்பாலானவை ஏற்கனவே பயன்பாட்டிலிருப்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டம் தற்போதுள்ள நிலப்பயன்பாட்டை மேம்படுத்தவும் பாதுகாக்க வேண்டிய பகுதிகளை பேணுவதற்கும் உதவும்.

2013ம் ஆண்டின் டிசெம்பர் மாதத்தில் 85 திட்டங்கள் நிறைவுசெய்ய இலக்காகக் கொள்ளப்பட்டது. 90 வீதமான திட்டம் நிறைவு செய்யப்பட்டது.

**காணிப்பயன் பாட்டுத்திட்டம் தயாரிப்பதற்கான விழிப்புணர்வுக் கூட்டம்**



கிளிநொச்சி மாவட்டம்



அனுராதபுரம் மாவட்டம்

## 5.2. மாவட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடற் குழு (மாகாபதிகு)

இலங்கையின் காணிப் பயன்பாட்டினை ஒழுங்குபடுத்த சம்பந்தப்பட்ட திணைக்களங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றிற்கிடையில் கூட்டான அணுகுமுறை தேவைப்படுகிறது. ஆகையால் காணிப்பயன்பாட்டு திட்டமிடற்குழு வெவ்வேறு மட்டங்களில் அதாவது தேசிய, மாவட்ட, பிரதேச மற்றும் கிராமமட்டங்களில் ஸ்தாபிக்கப்படல் வேண்டும்.

காஉகொதிதி இன் வழிகாட்டலுக்கு அமைவாக மாவட்ட காணிப்பயன் பாட்டுத் திட்டமிடற்குழு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. இக்குழுவின் தலைவராக மாவட்ட செயலாளர் /அரசஅதிபரும், செயலாளராக மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தரும் செயலாற்றுவார்கள். இக்குழு வழமையாக மூண்று மாதத்திற்கொருமுறை கூட்டப்படும். ஆயினும் தேவையாயின் அரசஅதிபரால் மேலதிகமாக குழுகூட்டம் கூட்டப்படலாம். குழுவினால் தீர்மானம் எடுப்பதற்கு சிக்கலான பிரச்சனையாக இருக்கின்ற சந்தர்ப்பத்தில் பிரச்சனை பற்றிவிசேட ஆய்வினை மேற்கொள்ள அரசஅதிபரால் குழு அங்கத்தவர்களைக் கொண்ட உபகுழு அமைக்கப்படலாம்.

**மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழுவின் செயல்பங்கு**

1. பயன்படுத்தப்படாத காணிகளை இனங்காணுதல் அவற்றை அறிவித்தல்
2. மாவட்டத்தில் காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல்துறையில் அபிவிருத்திச் செயற்பாடு முன்னுரிமையை நிர்ணயித்தல்.
3. நகரமற்றும் கிராமியதுறைகளில் எதிர்கால அபிவிருத்திக்கான இடங்களை இனங்காணுதல்.
4. மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்திகளுக்கான இடங்களை இனங்காணுதலும் அவற்றை விடுவிப்பதற்கு பரிந்துரை செய்தலும்.
5. பிரதேச மட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டத்தின் பரிந்துரைகளைப்பற்றி கலந்துரையாடி முடிவுசெய்தல்
6. மாவட்டத்திலுள்ள பிரதான காணிப்பயன்பாடு தொடர்பான பிரச்சனைகளைப்பற்றி தேசிய காணிப்பயன்பாட்டுத் திட்டமிடற்முழுவிற்கு தெரிவித்தல்.
7. பிரதேச மற்றும் கிராமியமட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டங்களிற்கான உள்ளீடு களை வழங்கல்.
8. மாவட்ட மட்டத்தில் காணிப்பயன்பாடு பற்றிய தரவுகளை உருவாக்கஉதவுதலும் வழிகாட்டலும்.
9. காணிப் பயன்பாட்டுத் திட்டங்கள் அமுல்ப்படுத்தலை கண்காணித்தல்.
10. வெவ்வேறு நிறுவனங்களின் காணிப்பயன்பாட்டு செயற்பாடுகளை ஒருங்கினைத்தல்.

**மாவட்டகாணிப்பயன்பாட்டுத்திட்டமிடற்குழுவின்அமைப்பு**

1. மாவட்ட செயலாளார்/ அரசஅதிபர் - தலைவர்
2. பிரதேச செயளாளர்
3. மாவட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர் - செயலாளர்
4. மாகாண காணி ஆணையாளர்/ உதவி காணி ஆணையாளர்
5 பிரதிப்பணிப்பாளர் (விவசாயவிரிவாக்கம்)
6. மாவட்டவன உத்தியோகத்தர்
7. நிலஅளவை கண்காணிப்பாளர்
8. உதவி ஆணையாளர் - கமத்தொழில் சேவைகள்
9. பிரதிப் பணிப்பாளர் - நீர்ப்பாசனம்
10. உதவி ஆணையாளர் -உள்ளூராட்சி
11 உதவிப் பணிப்பாளர் - ஏற்றுமதிப் பயிர்கள்
12 முகாமையாளர் - தேயிலை சிறுதோட்ட சொந்தக்காரர் அதிகாரசபை
13. பிரதிப் பணிப்பாளர் - இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்
14. பிரதேசமுகாமையாளர் - தெங்குப் பயிர்ச்செய்கைசபை
15. உதவிப் பணிப்பாளர் - மத்திய சுற்றாடல் அதிகாரசப

தேவை ஏற்படின் அரசஅதிபரினால் ஏனைய திணைக்களங்கள்/ நிறுவனங்களிலிருந்து மேலதிமாக அங்கத்தவர்களை நியமிக்கலாம்.
2013ம் ஆண்டில் 50 மாவட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடற் குழுக்கூட்டங்கள் நடாத்த இலக்காகக் கொள்ளப்படடு இலக்கு அடையப்பட்டுள்ளது. ஒவ்வொரு குழுக்கூட்டத்திற்கும் ரூபா. 3000/= ஒதுக்கீடு செய்யப்பட்டது.

## 5.3. பிரதேசமட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடற் குழு

அந்தந்த மாவட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடற் குழுவின் வழிகாட்டலில் பிரதேசமட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடற்குழு செயற்படுகிறது. காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் நடவடிக்கைகள் பிரதேச காணிப்பயன் பாட்டுத்திட்டமிடற் குழுவின் ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளப்படும். பிரதேச காணிப்பயன்பாட்டுத் திட்டமிடற் குழுவின் தலைவராக பிரதேச செயலாளாரும், காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உதவியாளர் செயலாளராகவும் , குழுவின் ஒருங்கிணைப்பாளராகவும் செயலாற்றுவார்கள்.

**பிரதேசமட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடற் குழுவின் செயல்பங்கு**

1. பிரதேச மட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடலுக்கு உதவுதல் மற்றும் அமுலாக்கல் நடவடிக்கைகள்
2. காணிப் பயன்படுத்தலில் முன்னுரிமையான காணிகளை இனங்காணுதல்.
3. காணிப்பயன்பாடு தொடர்பான பிரச்சனைகளை இனங்காணுதல் அவற்றிற்கான பரிந்துரைகளைச் செய்தல் தேவையாயின் மாவட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடற் குழுவிற்குமுன்வைத்தல்.
4. காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் பரிந்துரைகளின் அடிப்படையில் குறுகியகால மற்றும் நீண்டகால செயற்திட்டங்களை தயாரித்தல். இத்திட்டம் பிரதேசமட்ட வருடாந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும்.
5. தேவையானபோது மாவட்ட மற்றும் தேசிய மட்டகுழுவிற்கு பரிந்துரைகளை வழங்குதல்
6. காணி கையகப்படுத்துலக்கு பரிந்துரைகளை வழங்குதல்
7. காணி பராதீனப்படுத்தலுக்கு பரிந்துரைகளை வழங்குதல
8. கிராமமட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடற் குழுவிற்கு வழிகாட்டல்
9. எதிர்கால அபிவிருத்திக்காக பிரதேசத்திலுள்ள காணிகளை இனங்காணுதல்.
10. பல்வேறு பாவனைகளுக்கும் காணிகளை ஒதக்கீடு செய்யும்போது காணிப் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் பரிந்துரைகளை வழங்குதல்
11. பிரதேசமட்டத்தில் காணிப்பயன்பாடு பற்றிய தரவுகளை உருவாக்கல் அதனை மாவட்ட தரவு அடிப்படையுடன் இணைத்தல்.

பிரதேசமட்டகாணிப்பயன்பாட்டுத்திட்டமிடற்குழுவின் அமைப்பு

1. பிரதேச செயலாளர் - தலைவர்
2. காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உதவியாளர் - செயலாளர்
3. காணி உத்தியோகத்தர்/ குடியேற்றத்திட்ட உத்தியோகத்தர்
4. விவசாயப் போதனாசிரியர்
5. பெரும்பாக உத்தியோகத்தர் - கமத்தொழில் சேவைகள்
6. வன உத்தியோகத்தர்
7. உதவி நிலஅளவை கண்காணிப்பாளர்
8. விரிவாக்க உத்தியோகத்தர் (தேயிலை/தென்னை/இறப்பர்)
9. கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்
10. சுற்றாடல் உத்தியோகத்தர்
11. விவசாயிகள் அமைப்பின் பிரதிநிதி.
12. பெருந்தோட்டதுறையில் பிரதிநிதி
13. சம்பந்தப்பட்ட அரசமுகவர் அமைப்புகளின் பிரதிநிதி.

2013ம் ஆண்டில் 400 மாவட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடற் குழுக்கூட்டங்கள் நடாத்த இலக்காகக் கொள்ளப்படடு 373 கூட்டங்கள் நடாத்தப்பட்டது. ஒவ்வொரு குழுக் கூட்டத்திற்கும் ரூபா. 1500/= ஒதுக்கீடு செய்யப்பட்டது. சில பிரதேச செயலாளர் பிரிவுகளில் அக்கூட்டம் பிரதேச விவசாய குழுக்கூட்டத்துடன் சேர்த்து நடாத்தப்பட்டதனால் ஓதுக்கீடு முழுவதும் பயன்படுத்தப்படவில்லை.

## 5.4. கிராமமட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் செயல்முறை

கிராம சேவையாளர் பிரிவுகளில் காணப்படும் காணிப்பயன்பாடு தொடர்பான பிரச்சனைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் கிராமம்/ கிராமங்கள் கிராமமட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் செயல்முறையினை அமுல்ப்படுத்துவதற்காக தெரிவுசெய்யப்படும். அத்துடன் மேற்கூறப்பட்ட கருதுகோளைவிட நிலத்தை பயன்படுத்துவோரின் ஈடுபாட்டையும் கருத்திற்கொண்டு கிராமம் தெரிவுசெய்யப்படும். இச்செயல்முறை சம்பந்தப்பட்ட தகவல்களை சேகரித்தல் மற்றும் கிராமத்திற்கான திட்டமுன்மொழிவை தயாரித்தல் ஆகியவற்றுடன் ஆரம்பிக்கப்படும். இத்திட்ட முன்மொழிவை காணிப் பயன்பாட்டுத்திட்டமிடல் உதவியாளாரினால் உருவாக்கப்பட்டு மாவட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோத்தரினூடாக தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்;படும். திட்டம் அனுமதிக்கப்பட்டபின் மாவட்ட உத்தியோத்தரின் மேற்பார்வையில் அமுல்ப்படுத்தப்படும். 2013ம் ஆண்டில் 80 கிராமங்கள் இலக்காகக் கொள்ளப்பட்டபோதிலும் 70 கிராமங்களில் திட்டம் நிறைவுசெய்யப்பட்டது. 2013ல் ஒவ்வொரு திட்டத்திற்கும் ரூபா 100,000/= ஒதுக்கப்பட்டது. சிலகிராமங்களில் 2012ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட செய்துகாட்டுதல் தொடரப்பட்டு திட்டங்கள் ஒவ்வொண்றிற்கும் ரூபா 10,000/= ஒதுக்கப்பட்டது. இவ்வாறாக 50 திட்டங்கள் தொடரப்பட்டது.

**2013 ல் அமுலப்படுத்தப்பட்ட கிராமமட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் மாதிரி**





**கம்பஹாமாவட்டம்**

## 5.5. காணித்துண்டு மட்டத்தில் காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் செயல்முறை விளக்கம்

இத்திட்டம் பாடசாலை பிள்ளைகள் பொதுசனஊழியர்கள் உள்ளடங்கலாக சமூகத்தில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துவதால் ஏனைய திட்டங்களைவிட அதிகம் பிரசித்தமானது. இத்திட்டத்தின் நோக்கம் சிறிய காணித்துண்டொன்றினை உற்பத்தி முறையில் திறனுள்ளவாறு எவ்வாறு பயன்படுத்துவது பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதும் திறமை மற்றும் அறிவை வழங்குவதாகும். பாடசாலைகள், மாவட்டசெயலகங்கள்; பிரதேசசெயலகங்கள் ஆகியவற்றில் உள்ளகாணிகள் இத் திட்டத்திற்கு தெரிவுசெய்யப்பட்டன. 2013ம் ஆண்டில் 50 செயல்முறை விளக்கங்கள். செயற்படுத்த இலக்காகக்கொள்ளப்பட்டு இலக்கு அடையப்பட்டது. ஒவ்வொரு செயல்முறை விளக்கத்திற்கும் ரூபா 50.000/= ஒதுக்கப்பட்டது.

**காணித்துண்டு மட்டத்தில் காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் மாதிரி**



கொழும்பு மாவட்டம்
மொரட்டுவை பிரதேசசெயலகம்



குருநாகல் மாவட்டம்
வால்பாலுவ ஆரம்பப்பாடசாலை

## 5.6. தரமிழந்த காணிகளை புனரமைப்பதற்கான திட்டம்

சரியாக பராமரிக்கப்படாத எந்தவொரு நிலமும் தரமிழந்துபோகலாம். மோசமான பராமரிப்பிலுள்ள விவசாயகாணிகளும் தரமிழந்துபோகும். ஆகையால் இத்திட்டத்தின்கீழ் தரமிழந்த விவசாயக்காணிகளை அபிவிருத்தி செய்வதற்கான உபாயங்கள் அறிமுகப் படுத்தப்படும். செயற்திட்டத்தின் முதலாவது நிலையை அமுல்ப்படுத்தம்போது தரமிழந்தகாணிகள் இனங்காணப்பட்டன. இக்காணிகளை புனரமைப்புச் செய்வதற்காக தொழில் நுட்பநடவடிக்கைகள் அடங்கலான திட்டமுன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு அமுல்ப்படுத்துவதற்கு முன்பாக அனுமதிபெறுவதற்காக தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படும். 2013ம்ஆண்டில் 59 தரமிழந்த காணிகளை புனரமைப்பதற்கான திட்டம் இலக்காகக் கொள்ளப்பட்டதில் 47 திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டது. 2013ல் ஒவ்வொரு திட்டத்திற்கும் ரூபா 50,000/= ஒதுக்கப்பட்டது.

**2013 ல் அமுலப்படுத்தப்பட்ட தரமிழந்தகாணிகள் புனரமைப்பு**





குருநாகல் மாவட்டம் நுவரெலியா மாவட்டம்

## 5.7. பாடசாலைப் பிள்ளைகளுக்கும் சமூகத்திற்கும் விழிப்புணர்வுக் கூட்டம் நடாத்தல்

இத்திட்டத்தின் நோக்கம் நிலவளத்தை எதிர்கால சந்ததியினருக்காக வளங்குன்றாமல் பயன்படுத்தல்பற்றி பாடசாலைப் பிள்ளைகளுக்கும் சமூகத்திற்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துதலாகும். காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் விடயம் உயர்தர புவியியல் பாடத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதனால் இத்திட்டம் பாடசாலைப் பிள்ளைகளுக்கு மிகவும் பொருத்தமானதும் பயனுள்ளதுமாகும். 2013ம் ஆண்டில் 716 விழிப்புணர்வு நிகழ்சிகள் நடாத்த இலக்காகக் கொள்ளப்பட்டபோதிலும் 654 நிகழ்சிகள் நடாத்தப்பட்டது. ஒவ்வொரு செயல்முறை விளக்கத்திற்கும் ரூபா 3,000/= ஒதுக்கப்பட்டது.

**<u>2013ம் ஆண்டில் பாடசாலைப் பிள்ளைகளுக்கும், சமூகத்திற்கும் விழிப்புணர்வு கூட்டங்கள்</u>**



காலி மாவட்டம்



குருநாகல் மாவட்டம்



அம்பாந்தோட்டை மாவட்டம்

## 5.8. நிலப்பொருத்தப்பாட்டுஅறிக்கைகள்

வெவ்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நிலவளங்களை விஞ்ஞானரீதியாக ஒதுக்கீடு சய்தெலனதை தேவைப்படும் நோக்கத்திற்கான நிலப்பொருத்தப்பாட்டின் அடிப்படையிலாகும். நிலத்தின் பொருத்தப்பாடு வெவ்வேறு நிபந்தனைகள பயன்படுத்தி தீர்மானிக்கப்படுவதுடன் கோரிய நிறுவனங்களுக்கு அறிக்கையாக வழங்கப்படும். இந்தசேவைக்கான நிர்வாகசெலவை சமாளிப்பதற்காக 2011 ம் ஆண்டிலிருந்து கட்டணம் அறவிடப்படுகிறது. 2013ம் ஆண்டில் மூவாயிரத்தி ஐந்நூற்றி அறுபத்தாறு (3566) அறிக்கைகள் கோரிய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.

## 5.9. விசேடதிட்டங்கள்

(i) கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் காணிப்பயன்பாட்டுத் திட்டம் உருவாக்குதல்.

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் (கபாநஆ) பரிந்துரைகளில் பந்தி 9.152ல் குறிப்பிட்டதின் அடிப்படையில் வடக்கு, கிழக்கு மாவட்டங்களுக்கு மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டம் உருவாக்குதலுக்கான வேலைகள் தேசிய மற்றும் மாவட்டமட்ட நிபுணர்குழுவனால் 2012 ம்ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்நடவடிக்கைகள் 2013, 2014 இலும் தொடரப்படுகிறது.

தற்போதயதும் எதிர்காலச் சந்ததிகளின் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்தும் நோக்குடன் சுற்றுச்சூழல் மற்றும் உயிரியல் பன்மைத்துவம், நிலையான பொருளாதார அபிவிருத்தி, ஓய்வுமற்றும் பொழுது போக்குதரங்கள், மத, கலாச்சார மற்றும் தொல்லியல் புராதனத் தலங்கள் என்பவற்றைப் பாதுகாக்கும் முகமாக காணிப் பாதுகாப்பு மற்றும் பராதீனப்படுத்தலில் மாவட்ட நிர்வாகத்திற்கு வழிகாட்டுவதற்கு சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகளிலிருந்தும் மாவட்ட மற்றும் தேசிய நிபுணர்களின் பங்குபற்றுதலுடன் வடக்கு மற்றும் கிழக்கின் 08 மாவட்டங்களிற்குமான காணிப்பாவனைக்கான ஒருதிட்டம் உருவாக்கப்படுகிறது.

தொழில்நுட்ப உதவி மற்றும் பரிந்துரைகளை பெறுவதற்காக தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் நிபுணர்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அடிப்படை வரைபடங்கள் தயாரித்தல், பங்காளர்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக மாவட்ட மற்றும் பிரதேசமட்டத்தில் விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடாத்துதல் ஆகிய வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் காணிப்பயன்பாட்டுத்திட்டம் உருவாக்குதலில் முன்னேற்றம் பற்றிக் கீழே தரப்பட்டுள்ளது.

**2013 டிசெம்பர் வரை காணிப்பயன்பாட்டுத் திட்டம் உருவாக்குதலில் மாவட்ட மட்டத்தில் பௌதீகமுன்னேற்றம்**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவுகளின் எண்ணிக்கை | பூர்த்திசெய்யப்பட்டுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகள் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 15 | 5 |
| கிளிநொச்சி | 4 | 0 |
| முல்லைத்தீவு | 6 | 5 |
| வவுனியா | 4 | 3 |
| மன்னார் | 5 | 5 |
| அம்பாறை | 20 | 19 |
| மட்டக்களப்பு | 14 | 14 |
| திருகோணமலை | 11 | 11 |
| மொத்தம் | **79** | **62** |

## எல்எல்ஆர்சி திட்டம் அமுலாக்கல்



வவுனியா மாவட்ட விழிப்புணர்வுக்கூட்டம்



வவுனியா மாவட்டம் வெளிக்களப் பயிற்சி

### (ii) "**தேசத்திற்கு மகுடம்**" **தேசிய கண்காட்சி நிகழ்ச்சி**

2013 ம்ஆண்டு தேசத்திற்குமகுடம் தேசிய கண்காட்சி நிகழ்ச்சி அம்பாறையில் நடைபெற்றது. அபிவருத்தித் திட்டங்கள் பொலனறுவை, திருகோணமலை ஆகிய மாவட்டங்கள் உள்ளடங்கியதாக திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்டது. கண்காட்சிக்கூடம் அம்பாறை கார்டி தொழில்நுட்பக்கல்லூரியில் மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்மிடல் அலுவலகத்திலுள்ள மாவட்ட உத்தியோகத்தர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களின் உதவியுடன் அமைக்கப்பட்டிருந்தது.

"அரசமொழிகள்ஆணைக்குழு"வினால் அரசமொழிக்கொள்கைக்கு அமைவாக காட்சிப் படுத்தப் பட்டிருந்த கண்காட்சிக் கூடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு சிறந்த கண்காட்சிக் கூடங்கள் தெரிவுசெய்யப்பட்டன. காபகொதிதி இன் கண்காட்சிக்கூடம் தெரிவுசெய்யப்பட்டு 1065 புள்ளிகளைப் பெற்றதுடன் சாண்றிதழும் வழங்கப்பட்டது.

### (iii) 2013 **ம்ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஏனைய விசேடதிட்டங்கள்**

- பாராளுமண்ற ஆலோசனைக்குழுவின் வேண்டுகோளின் அடிப்படையில் நீர்மூலங்களையும், அவற்றின் நீரேந்து பிரதேசங்களையும் ஒதுக்கங்களையும் பாதுகாப்பதற்கும் பேணுவதற்குமான தேசியகொள்கை வரைவு தயாரிக்கப்பட்டது.
- அம்பாறை அரசஅதிபரின் வேண்டுகோளிற்கிணங்க இறப்பர் பயிர்ச் செய்கைக்கு பொருத்தமான காணிகள் இனங்காணப்பட்டன.
- கால்நடை அபிவிருத்தி அமைச்சின் வேண்டுகோளிற்கிணங்க அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் மேய்ச்சல் நிலங்கள் இனங்காணப்பட்டன.
- சீனிக் கைத்தொழில் அமைச்சின் வேண்டுகோளிற்கிணங்க கரும்புப் பயிர்ச்செய்கைக்கு பொருத்தமான காணிகள் இனங்காணப்பட்டன.
- அத்தனகல ஓயாவில் ஆற்றுப்படுக்கை பேணும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.
- பெருந்தோட்டத்துறையில் பயன்படுத்தப்படாத காணிகள் இனங்காணப்பட்டன.
- ஜிஐஎஸ் தொழில்நுட்பத்தை உபயோகித்து தேயிலை, இறப்பர், செய்கை பண்ணும் காணிகளை வரைபடமாகக்கல். (களுத்துறை, காலி, இரத்தினபுரி, கேகாலை, கண்டி, மாத்தறைமாவட்டங்கள்)

## 5.10. வருடாந்த செயற்திட்டம்பற்றிய கருத்தரங்கு

2013ம் ஆண்டின் வருடாந்த செயற்திட்டம் பற்றிய கருத்தரங்கு திணைக்களத்தின் சகலஉத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் நடைபெற்றது. கலந்துரையாடலைவிட மேலும் விடயம்சார்பான நிறுவனங்களிலிருந்து வல்லுனர்களால் விடயம்சார்ந்த விளக்கங்கள் வழங்கப்பட்டன.

## 5.11. மாவட்ட மட்டத்தில் திட்டங்களின் முன்னேற்றம்

மாவட்டங்களில் அமுல்ப்படுத்தப்பட்ட திட்டங்களின் முன்னேற்றம் பற்றிய சுருக்கம்

| திட்டம் | இலக்கு | முன்னேற்றம் |
|---|---|---|
| பிரதேச காணிப் பயன்பாட்டுத் திட்டங்களை தயாரித்தல் | 85 | 78 |
| மாவட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடற் குழு | 50 | 50 |
| பிரதேசமட்டகாணிப்பயன்பாட்டுத்திட்டமிடற்குழு | 400 | 373 |
| கிராமமட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் செயல்முறை (புதியது) | 80 | 70 |
| கிராமமட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் செயல்முறை (தொடர்ச்சி) | 50 | 50 |
| காணித்துண்டு மட்டத்தில் காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் செயல்முறை விளக்கம் (தொடர்ச்சி) | 92 | 92 |
| தரமிழந்த காணிகளை புனரமைப்பதற்கான திட்டம் (தொடர்ச்சி) | 59 | 47 |
| பாடசாலைப் பிள்ளைகளுக்கும் சமூகத்திற்கும் விழிப்புணர்வுக் கூட்டம்நடாத்தல் | 716 | 654 |

## அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னேற்றம் பற்றிய சுருக்கம்- 2013

